**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 33/2025**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | 10.10.2025 |
| **பெயர்** | **செல்வராஜ்** |
| **த/பெ** | **சிதம்பரம்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 02.39.p.m**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என்னுடைய கிரையபத்திரத்தை என்னுடைய மகன் பவர் ஏஜென்டாக எழுதிக்கொடுத்தார். நான் கிரைய ஒப்பந்ம் போட்ட அடிப்படையில் எனது மகன் பெயரில் பவர் பெற்று பத்திரம் ஏற்படுத்தப்பட்டது. அந்த பவர் பத்திரம் என்னிடம் தான் உள்ளது. அந்த பவர் பத்திரத்தை எப்போது வேண்டுமானாலும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். எனது பெயரில் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்தம் என் வசம் தான் உள்ளது, அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும்.

1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் அவர்கள் இருவரும் பல வருடங்களாக என்னிடம் வாடகை தாரர்களாக இருந்து வருகிறார்கள். இந்த வாடகை பற்றிய விவரம் தெரிந்து தான் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரிதான். ரூ. 99,00,000 பெரிய தொகைக்கு கிரைய ஒப்பந்தம் போடும் பட்சத்தில் எப்போது ஸ்வாதீனம் என்னிடம் கிடைக்கும் என்பதை நான் கேட்டேனா என்றால் கேட்டேன். நான் வாடகை தாரர்களான 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளிடம் சமாதானமாக பேசி அவர்களிடம் இருந்த சொத்தை நாங்கள் ஒப்படைத்து கொண்டு கிரையப்பத்திரம் எழுதி கொடுத்து சொத்தின் ஸ்வாதீனத்தை ஒப்படைப்பதாக அவர்கள் கூறினார்கள்.

அவ்வாறு கூறியதற்கு பிற்பாடு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதா அல்லது அதற்கு முன்பாக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை. நான் கிரைய ஒப்பந்தம் போட்ட தேதி ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. தேதி ஞாபகம் இல்லாத கிரைய ஒப்பந்த முன்னிலையில் தான் கிரைய பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம்.02.45.p.m.**